
www.tamilarangam.net

# சிந்தனை

வைகாசி – ஆனி

May - June

1987



# SINTHANAI

3/87

அன்பளிப்பு 4 DM

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்த மௌனம் சம்மதமன்று!

வைரமுத்து

என் பிரிய எதிரிகளே!
உங்களை
மன்னிப்பதற்குப் பதிலாய்
நான்
மௌனம் அனுஷ்டிக்கிறேன்.

உங்கள் முகவரியை
நீங்கள் ஏன்—என்
முதுகில் எழுதிவிட்டு
ஒளிகிறீர்கள்..?

பொன்னுடையையும்
சவத்துணியையும்
ஒரே தறியில்
நெய்யத் தெரிந்த
நெசவாளிகளா நீங்கள்?

நெஞ்சில்
முட்செடிகளை வைத்துக்கொண்டு
நாக்கில் மட்டும் எப்படி
நந்தவனம் வளர்க்கிறீர்கள்?

உங்கள் பேனாவுக்குப்
பூட்டுப் போட்டுவிட்டு
சாவியை எங்கோ
தொலைத்து விட்டீர்கள்.
நஷ்டம் இல்லை!
அது—
பெரும்பாலும் எழுதியது
பிள்ளையார் சுழிதானே?

பிரிய எதிரிகளே!
என் பேனாவின் கழுத்தைத்
திருகிவிடத் தீர்மானமா?

எச்சில் துப்பி—என்ன
தீயை அணைத்துவிடத்
திட்டமா?

என்ன செய்வீர்கள் என்னை?
இசையும் கவிதையும்
இல்லாத தேசத்திற்கா
என்னை
நாடுகடத்திவிட முடியும்?

வாயுமண்டலத்தில்
எனக்கான காற்றைக்
களவாடி விடவா முடியும்?

என்னைப் புதைத்தாலும்—நான்
முளைத்து விடுவேன்!
என்னை எரித்தாலும்
ஃபீனிக்ஸ் பறவையைப்போல்
உயிர்த்துவிடுவேன்!

மன்னிப்பு—
பாவிகளை வளர்க்குமென்பதால்
நான் மன்னிப்பதில்லை.

சருகுகளின் சலசலப்பிற்கு
ஆணிவேர் பதில்சொல்லாது.

என் எழுத்துக்கு
மரணமில்லை!
மரணத்தைப் போலவே
என் எழுத்தும் நிலையானது.

என் வானம்
தூசு தொடமுடியாத
தூரம்!
என் கவிதை
என் தாய்மொழிக்கு ஆடை.
சமூகத்தின் சம்மதத்தோடு
கர்வமாயிருக்கிறேன்!
ஒவ்வோர் இருதயத்திலும்
மௌனமாய் மழைபொழிவேன்!

என் எழுத்துக்கள்
உழைக்கும் மக்களின்
உண்டியல்கள்.
அவர்கள் அதைப்
பத்திரமாகப்
பாதுகாப்பார்கள்.

பிரிய எதிரிகளே!
ஒரு துறவியின்
தபோவனம்போல்
மௌனமாய் இருக்கிறேன்.
ஆனால்—இந்த மௌனம்
சம்மதத்தின்
சைகை அன்று.

நன்றி - ஆனந்தவிகடன்.

www.tamilarangam.net

# சிந்தனை



## ஆசிரியர் கருத்து

யாழ்ப்பாணத்தின் பெரும் பகுதி சிறிலங்கா ராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுவிட்டதனால் மேலும் ராணுவத்தாக்குதல்கள் தொடரப்படமாட்டாது. யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றும் நோக்கம் சிறிலங்கா அரசிற்கு இருந்திருக்கவில்லை. கைப்பற்றிய இடங்களில் ராணுவத்தின் ஆளுமையைப் பலப்படுத்துவதற்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும் சிறிலங்கா அரசாங்கம் தயாராக இருக்கின்றது என சிறிலங்கா உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி 10.6.1987 இல் அறிவித்ததற்கு பல அடிப்படைக்காரணங்கள் இருந்தன.

ஈழப்போராளிகளின் அணிகளில் ஏற்பட்ட முரண்பாடுகளை தனக்குச் சாதகமாகப் பாவித்து சில தற்காலிக வெற்றிகளைக் கண்ட சிறிலங்கா அரசாங்கம், தனது அணிவேரையே ஆட்டிவைக்கும் முரண்பாடுகளினால் ஆட்டம் கண்டுகொண்டிருக்கின்றது.

சாதாரண சிங்களப் பொதுமக்களுக்கு பேரினவாத வெறியையூட்டி அவர்களின் கவனங்களைத் திசைதிருப்பி தனது வர்க்க நலன்களை பாதுகாத்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்து வரும் அரசியல் நெருக்கடிகளில் இருந்து மீளுவதற்கு பிரய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திதனங்களைச் செய்து கொண்டிருக்கின்றது. இனவெறிக் கொள்கைகளை உள் நாட்டில் நடைமுறைப்படுத்தும் அதேவேளையில், ஏற்கனவே பெற்றிருக்கும் 13,900 மில்லியன் ரூபாய் வெளிநாட்டுக்கடன்களுக்கு மேலாக இன்னும் கடன்களைப்பெறுவதற்கு சமாதானம் பேசும் ருத்திராட்சகாய்ம்பூனை போல் ரொனி டி மெல், இந்த வருட இறுதியில் பிச்சைப்பாத்திரம் ஏந்தி சர்வதேச நாணய நிதியத்திடம் போக வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. அதே வேளையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்பந்தத்தின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் சீரழிவில் பெருகி வரும் வேலையில்லாமையும், பணவீக்கத்தினால் ஏற்பட்டு வரும் வறுமைப் பிணியும், சமுதாயத்தில் நுரையோடிவிட்ட புண் போல அங்கொன்றும் இங்கொன்றுமாக வெடிக்க ஆரம்பித்திருக்கின்றன. இவைகளைக் கட்டுப்படுத்த தொடர்ச்சியாக அமுல்நடத்தப்பட்டு வரும் அவசரகாலச்சட்டத்தையும் மீறி எழுச்சியின் முன் அறிவிப்பாளரான மாணவர்கள் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். பள்ளேகல, ரத்மலான, கட்டுநயக்கா ஆகிய இடங்களில் நடைபெற்ற ஆயுதக்கொள்ளைகள் ஆயுத ரீதியான எதிர்ப்புக்களையும் தாம் எதிர்நோக்க வேண்டிவரும் என்ற கலக்கத்தையும் அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியுள்ளது. சுமார் 150 ராணுவத்தினர் தப்பியோடியிருக்கின்றனர். 35 ராணுவத்தினர் அரசவிரோத சக்திகள் என குற்றம் சாட்டப்பட்டு வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். சமீபத்தில் ராணுவத்தில் சேர்க்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தீவிர கண்காணிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். தனது அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ராணு

www.tamilarangam.net

வத்தை நம்பியிருக்கும் அரசாங்கம், அவர்கள் மீது நம்பிக்கையிழந்து வருவது அதன் பலவீனத்தையே காட்டுகின்றது.

வடக்கிலும் கிழக்கிலும் தனது அதிகாரத்தை நிலைநாட்ட முடியாத இந்த அரசாங்கம், மற்றைய பகுதிகளிலும் தனது ஆளும் தகமையை இழந்துவிட்டது என பிரதான எதிர் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது எதிர்ப் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார். 1982 இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்காக நடத்தப்பட்ட சர்வஜனவாக்கெடுப்பின் போது பலாத்காரமும் ஊழல் நடவடிக்கைகளும் இடம் பெற்றதாகவும் இதன் காரணமாக அதன் முடிவுகளும் பாதிக்கப்பட்டிருக்கலாம் என தேர்தல் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையை மேற்கோள்காட்டி, இந்த அரசாங்கம் தொடர்ந்தும் பதவியிலிருக்க தகமையற்றது எனக் கூறியுள்ளார். ரஜீவ் காந்தி உட்பட சகல வெளிநாட்டுத் தலைவர்களுக்கும் திருமதி. பண்டாரநாயக்கா இதுபற்றிக் கடிதமும் எழுதியுள்ளார். உடனடியாக ஒரு பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் மக்களின் விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசாங்கத்தினாலேயே நாட்டின் பிரச்சனைகளைத்தீர்க்க முடியும் என்ற பிரசாரத்தை அவர் மக்கள் முன் வைத்துள்ளார்.

மேதின ஊர்வலங்களுக்கும் கூட்டங்களுக்கும் விதிக்கப்பட்ட தடைகளை மீறி நடத்தப்பட்ட ஊர்வலங்களும் கூட்டங்களும், இன்று அரசாங்கத்திற்கு எதிராக அணிதிரண்டு கொண்டிருக்கும் மாணவ தொழிலாள சக்திகளின் எதிர்ப்பிற்கு ஒரு உதாரணமாக இருந்தது. மே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தினத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவனான ரணவக்கவின் சட்டவிரோதமான மரணச்சடங்கில் கலந்து கொண்ட 4000 க்கும் அதிகமான மாணவர்கள் பாணந்துறை நகரத்தில் செங்கொடிகளுடன் பெரும் அரச எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடத்தினார்கள். வெல்லம்பிட்டியில் நடைபெற்ற தொழிலாளியின் மரணச்சடங்கிலும் பெரும் தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்தினால் வளர்க்கப்பட்ட இனவாத சக்திகள் இந்த அரசாங்கம் சாதாரண பொதுமக்களையே காப்பாற்ற முடியாத அரசாங்கம் எனக் குற்றம் சாட்டும் அதே வேளையில் ஸ்திரமான சமூகமான சூழ்நிலைகளில் மக்களைச் சுரண்டி இலாபம்பெறும் மூலதனக் கொள்ளைக்காரர்கள் தமக்கு தேவையான சூழ்நிலைகளை ஏற்படுத்த முடியாத இந்த அரசாங்கத்தின் மீது வெறுப்புக் கொள்ள ஆரம்பித்துள்ளனர். இந்த உள் முரண்பாடுகள் ஆளும்கட்சிக்குள் வெடிப்புகளையும் உண்டாக்குகின்றன. இவற்றின் வெளிப்பாடுகளாகவே அரசாங்கத்தின் ராணுவ நடவடிக்கைகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளும் அமைகின்றன.




நன்றி – கல்கி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மரணத்துள் வாழ்வு

— காளிதாஸ்.

இப்பொழுது தமிழ் பேசும் பகுதிகளில் இருந்து வரும் செய்திகள் எல்லாம் பதுங்கு குழிகள் பற்றிய கண்ணீர்க்கதைகள் சொல்லுகின்றன. உரிமைகள் இழந்த, உடமைகள் இழந்த எமது மக்களின் சோகத்தை அகதிமுகாம்களும் கோவில்களும் சுமக்கின்றன. அடக்குமுறை இருள் சூழ்ந்த எங்கள் தேசத்தின் தெருக்கள், முகமறியா இருளில் முகமிழந்து போன முகங்கள், பாதி எரிந்து மீதி அழிந்து சிதைந்த உடல்கள், மனித வேட்டையாடுபவர்களால் படு கொலை செய்யப்பட்டு வீசியெறியப்பட்ட எங்கள் தேசத்து இளைஞர்களை, தீச்சுவாலைகள் எரித்த எங்கள் ஆலயங்களைப்பற்றிய சோகக் கதை சொல்லுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலே வல்லூறுகளாக வட்டமிடும் யுத்த விமானங்கள். ராணுவ முகாம்களில் இருந்து திடீர் திடிரென்று 'எமனாக' வந்து விழும் 'செல்கள்' இன்று ஈழதேசத்தின் ஒவ்வொரு மனிதனையும், ஒவ்வொரு அங்குல நிலப்பரப்பையும் அடக்குமுறை இருள் சூழ்ந்த படி.........

அடுத்த நிமிட வாழ்வே கேள்விக் குறியாகம்போன மக்கள் வாழும் எங்கள் தேசத்தில்.... குன்றும் குழியுமாக.... சுடுகாடாக பதுங்கு குழிகள்... எரிந்த மணம்.. எங்குபார்த்தாலும்... ஆதிக்கத்தின் சுவடுகள், ஆக்கிரமிப்பின் பிரதிபலிப்புகள்.... அகதிகளாக, அனாதைகளாக சொந்த இடங்களை விட்டு வெளியேறிக் கொண்டும் அடிக்கடி வட்டமிடும் யுத்த விமானங்களுக்கு அஞ்சி தமது வீடுகளில் வெட்டி வைத்திருக்கும் பதுங்கு குழிகளில் ஒளிந்து கொண்டும்.......

மானிடம் 'மனிதனை'க்கண்டு ஒளியும்.

ஏற்கனவே அரசு போட்ட பொருளாதாரத் தடையின் எதிரொலி இன்று..... முற்றாகவே சீர் குலைந்து விட்ட மக்களின் வாழ்வு. அகதிமுகாம்களில் உணவுக்காக கையேந்தியவர்கள்....துன்பங்களை மட்டும் தந்து எடுத்த தேசம்!

"தொடரும் ராணுவ அட்டூளியங்களினால் வயலுக்குச் செல்லாததினால் நானும் எனது குடும்பமும் கடந்த ஒரு வாரமாக பட்டினி" என்கிறது ஈழத்திலிருந்து ஒரு அப்பாவிப் பொதுமகனின் குரல்.

"...வீடுகள் கட்டுவதற்குப் பணம் வேண்டாம். பதுங்குகுழிகள் வெட்ட பணம் ஒதுக்கினால் போதும்..." என்கிறது யாழ். பிரஜை

www.tamilarangam.net




எமது கிராமங்களை முற்றுகையிட்ட ராணுவத்தினர் 4000 இளைஞர்களை பூசாவுக்கு கொண்டு சென்றுவிட்டார்கள்.... "இரண்டு நாட்களின் பின் மீண்டும் கொண்டு வருவோம், என்று சொல்லிவிட்டு போனார்கள். இரண்டு வாரமாகிவிட்டது. இன்னும் காணவில்லை. எனது மனைவி பட்டினி கிடக்கிறாள்...."இது ஒரு தந்தையின் அழுகுரல்.

கோவில்கள், வீடுகள், பள்ளிக்கூடங்கள் எரிந்து கொண்டிருக்க....

வயல் வெளிகள் புகைந்து கொண்டிருக்க.......

நெருப்பைக்கக்கும் விமானங்களின் கீழ்........

பட்டினியின் விளிம்பில் நின்றுகொண்டு, தொற்று நோய்களுடன் போராடிக்கொண்டு எமது மக்களின் மரணத்துடனான சம்பாசனையும் தொடருகின்றது.






படங்கள். நன்றி — சற்றடே றிவியூ & தென் ஆசிய நிறுவனம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னும் அகலாத இரவுகள்!

— அருள்

விடியாத இரவுகளை
வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டிய நிலையில்
விழிகளைத் தொலைத்தவர்களுக்காக
சூரியனைப் பூமிக்கு கொண்டுவரப் புறப்பட்டவர்கள்
அஸ்தமனத்தில்-
பூபாள ராகம் இசைக்க
புல்லாங் குழலைத் தேடுகிறார்கள்.

அடிப்பதற்குத் தடி எடுத்துக் கொடுத்தவர்கள் நாம்
அதனால்தான்-
அடிக்குமேல் அடிவாங்கியும்
அழமுடியாத ஆச்சரியத்துக்கு
ஆராய்ச்சிகள் அவசியமற்றவையாகி விட்டன.

முதுகில் குத்துவது தமிழன் மரபல்ல என்று
தம்பட்டமடித்துக் கொண்டதனால்தான்
அறையில் தூங்கியவனை
அரிவாள் எடுத்து வெட்டும் நாடகத்தினை
அரங்கேற்றம் செய்து கொண்டிருக்கிறோம்.

ஜதி செய்த பாதங்கள்
சதி செய்த கோலங்கள்

www.tamilarangam.net

விரல்கள் இல்லாத கைகள்
மீட்ட எடுத்த வீணைகள்
சுருதி சேராத ராகங்களுக்கு
தாளம் போட விளைந்தவர்கள்.

ஒரு சத்திய வேள்வியிலே
சதமெடுத்த நாயகர்கள் தாம்
நித்திய வடுவுக்கும்
நிரந்தர உரிமை கொண்டார்.

முற்றத்து நிலவுக்கு
முகம் மறைத்துக் கொண்டவர்கள்
மத்தாப்புக் கொழுத்தி
வாண வேடிக்கை காட்டுகின்றார்.

மணலிலே வீடுகட்டி
மழையிடம் கோபித்துக் கொண்டவர் நாம்.
ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து
ஆளைக் கடிக்கும் சாணக்கியங்கள்.
வீட்டைக் கொழுத்தி குளிரைப் போக்க
கையிலெடுத்த கொள்ளிக்கட்டைகள்.

இல்லாத நூல்களிலே
இலக்கணம் கற்றவர்கள்
புதிய சூத்திரங்களுக்கு
அதிக பதிப்புக்கள் போடுகிறார்.

விதி என்றிருந்தவர்கள் மதி பெற்று
வீதிகளில் இறங்கிய வேளைதான்
வேடம் பூண்டவர்கள்
தம் நாடகத்தின் மறுபாதிக்கு
திரையை விலக்கினார்கள்.

www.tamilarangam.net

கிழிக்கப்பட்ட முகத்திரைகள்தாம்
இன்று ஈழத்தில் எம்மால்
முத்திரைகளாகக் குத்தப்படுகின்றன.
உபகண்டம் உதவிக்கு வருமென்றிருந்தவர்க்கு,
உபகாரம் உலைவைப்பு
தொட்டிலையும் ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளிவிடுதல்
பழமொழி தான் -
இன்னும் பழசாகாமல் இருக்கிறதே.

இரவல் கை கொண்டு
இளநீர் பறிக்க நினைத்தவர் நாம்,
அதனால் தான் -
தலையில் விழுந்தவற்றை
தடுக்க முடியாமல் இருந்துவிட்டோம்.

சேதுவை மேடுறுத்தி பாதை சமைக்க நினைத்ததனால்தான்
நீச்சலைக் கற்க மறந்து - பாக்கு
நீரிணையில் தத்தளிக்கிறோம்.

உத்தரவாதமில்லா வாழ்வுக்கு உச்சவரம்பு -
இன்று பெங்களூரில்
அன்று திம்புவில்
வட்டம்சதுரம் என்று
கதிரை மேசைகளுக்கு கனபரிமானம்.
கட்டவிழித்து விடப்பட்டது
அராஜகம் மட்டுமல்ல
மகாவம்சமும்தான்.
அன்று திரிக்கப்பட்டவைகளுக்கு
இன்று தீபாராதனை.
தீக்குளிப்பவர்கள் நாம்.

அறுவடைக்கு முந்திய தானியங்களை எண்ணி
பொங்கல் பானைகள்

www.tamilarangam.net

பெருமூச்சு விட்டுக் கொள்ளுகின்றன.
அடுப்பிலே பூனைக்கு புகலிடம் கொடுத்தவர்கள்
ஆகாயத்திலே நெருப்புக்கு
சிவப்புக் கொடி காட்டுகிறார்கள்.

பாதைகளின் தடைகளை தகர்க்க முனைந்த போது
பாறைகளின் எடைகளுக்கு
எங்கள் நெஞ்சங்கள் –
தராசுத் தட்டுக்களாகின.

வேலிகளை விட்டு இடம்பெயர்ந்த முட்களே
எம்மீது பரிவு கொண்டு
எங்களுக்கு படுக்கை விரித்தன.
தூக்கத்தை தொலைத்தவர்கள் நாம்,
அதனால்தான் -
இருளுக்கு மங்களம் இசைக்கிறோம்.

பறவைகளிடமிருந்து
இறக்கைகளை இரவல் வாங்கிக் கொண்டவர்கள்
நடுக்கடலில் சுமைகளை
நங்கூரமாக்கி இறக்கி விட்டார்கள்.
முத்துக் குளிக்க மூச்சுப் பிடித்தவர்கள்
தண்ணீருக்கு தங்களை தாரைவார்த்து விட்டதேன்?
கல்லிலே சமைந்தவர்களை
கந்தனும் மீனாட்சியம்மையும் என்று பெயரைவைத்து
மலையிலே கோயிலை அமைத்தவர் நாம்.
அதனால்தான் -
உயிருள்ள கந்தனும் மீனாட்சியம்மையும்
மலையிலே தேயிலைச் செடிகளுக்கு உரமாகுவதை
பார்த்துக் கொண்டிருந்தோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரத்தியொரு படியேறி
அபிஷேகம் செய்தவர் நாம்.
ஆனால் -
சூடம் ஏற்றிய கொள்ளிக் கட்டைகளை மட்டும்
அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட்டோம்.

ஓ......
இன்று தீவகமெங்கும் பற்றி எரிவது
அந்த நெருப்புத் தானே.

இன்னும் அகலாத இரவுகளுக்காக
கூரையைக் கொழுத்தும் புத்திசாலித்தனத்திற்கு
இனிமேலாவது முடிவுரையை எழுதுவோம்.

எம்மிளைஞர்களின் மரணங்கள்
அர்த்தம் நிறைந்தவை.
வேறு அர்த்தங்களுக்காக அகராதிகளைப் புரட்டும்
அறிவீனத்துக்கு ஆப்பு வைப்போம்.
நாளை -
இருளை எரிப்பதற்காக
நெருப்பாகி எழுந்துவரும் எம்மக்கள்
அந்தச் சூரியனையே பெயர்த்து
பூமிக்கு கொண்டுவருவார்கள்.

**நன்றி —**

"மண்ணில் தெரியுது வானம்" கவிதைத் தொகுப்பு.

கிடைக்குமிடம். EPIC
10,RUE DE MARTYRS,
75009,PARIS.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரத்தத்தால் எழுதப்படும் சரித்திரம்

'போர்' என்பது அரசியலின் தொடர்ச்சி' எனக் கூறப்படுவது உண்டு. சிறி லங்கா இனவாத அரசியலின் உச்சக்கட்டங்கள் சாதா -ரணப் பொதுமக்கள் மீது குண்டுகளை வீசிக் கொலை செய்யும் கோரமான போராக அரங்கேறிக்கொண்டிருக்கும் இந்த வேளை யில் எண்ணற்ற ஈழப்போராளிகள் தமது இன்உயிர் கொடுத்தும் இன வெறியர்களுக்கெதிராக போராடிக்கொண்டும், போராடவும் தயாராக இருக்கின்ற போதும், தமிழ் மக்கள் இரத்தக்கண்ணீர் வடித்துக் கொண்டு பதுங்கு குழிகளில் ஒளிந்து கிடக்க வேண்டிய நிலமைக்கு இட்டுச் சென்ற சமீபகால நிகழ்ச்சிகளை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

• • •

சிந்தனை (இல. 1/87) இல் குறிப்பிடப்பட்டிருந்தது போல, 1986 இறுதிப்பகுதிகளில் இந்திய அரசிற்கும் இலங்கைக்கும் இடை யில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் கிழக்குமாகாணமே முக்கிய விடயமாகப் பேசப்பட்டது.
இந்திய வெளிவிவாகார அமைச்சர் நதவார்சிங், உள்நாட்டு விவகாரம் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பி. சிதம்பரம் ஆகியோர் ஜே. ஆர். ஜயவர்தன தலைமையிலான சிறிலங்கா அரசின் குழுவினருடன் டிசம்பர் 18, 19களில் நடத்திய பேச்சுவார்த்தைகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளைவாக உருவாகிய "டிசம்பர் 19-பிரேரணைகள்" என அழைக்கப் பட்டதும் , வருங்காலப் பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமையவேண்டுமென சிறிலங்கா அரசாங்கத்தினால் ஒத்துக்கொள்ளப் பட்டதுமான பிரேரணைகள் கீழ் கண்டவாறு அமைந்தன.

டிசம்பர் 19 பிரேரணைகள்:

1. அம்பாறை தேர்தல் தொகுதி கிழக்கு மாகாணத்தில் இருந்து நீக்கப்பட்டு ஒரு புதிய கிழக்கு மாகாணம் உருவாக்கப்பட வேண்டும்.
2. புதிய கிழக்கு மாகாணத்தில் மாகாணசபை அமைக்கப்படும்.
3. முன்பு கருத்துப் பரிமாறப்பட்ட விடயமான, வடக்கு கிழக்கு மாகாணங்களை தொடர்புபடுத்தும் ஸ்தாபன அமைப்புக்கள் சகல தரப்பினராலும் ஒத்துக்கொள்ளக்கூடிய விதத்தில் தெளிவாக்கப்பட வேண்டும்.
4. வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் வாழும் மக்களின் விருப்புக்களை அறியக்கூடிய வழிமுறைகளைத் தீர்மானிப்பதைப் பொறுத்து சிறிலங்கா அரசாங்கம் வடக்குமாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைவதற்கான அரசியலமைப்பு மாற்றங்களுக்கான பிரேரணைகளைப் பரிசீலிக்க சம்மதிக்கும்.
5. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உபஜனாதிபதி பதவி ஒன்றை உருவாக்குவது பற்றி பரிசீலனை செய்யவும் சிறிலங்கா அரசு சம்மதிக்கின்றது.
6. இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா சென்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழர் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்த இந்தி இந்தியாவிற்கு அழைக்கப்படலாம்.

வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்த ஒரு மாநிலத்தைக் கொண்ட ஒரு தீர்வையே தமிழர்கள் ஏற்றுக் கொள்ள முடியும் என்ற கோரிக்கைக்கு ஈடுசெய்யு முகமாகவே இந்தப் பிரேரணைகள் முன்மொழியப்பட்டன எனக் கூறப்பட்டது. தொடர்ச்சியான சிங்களக் குடியேற்றத்தினால் சிங்களத்தொகுதியாக்கப்பட்ட அம்பாரைத் தேர்தல் தொகுதியை உவா மாகாணத்துடன் இணைப்பதன் மூலம் புதிய கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் எண்ணிக்கை 48%மாக (முஸ்லிம்கள்–37%, சிங்களவர்–14%) ஆக்க முடியும் எனக் கூறப்பட்டது. வடக்குக்கும் கிழக்குக்கும் பொதுவான பல்கலைக்கழகம், திட்டமிடல் கமிசன், இணைந்த மாகாண அமைச்சுக் குழுக்கள் தேசிய காணி சபை, குடியேற்றக் கட்டுப்பாட்டு சபை, மாகாண எல்லைக் கமிசன் ஆகியவை பற்றி தமிழர் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படவேண்டுமெனவும் கருதப்பட்டது.

சிறிலங்கா அரசின் கபட நாடகம்.

இந்தியப் பிரதிநிதிகள் நாடுதிரும்பிய சில தினங்களுக்குள் சிறிலங்கா அரசு இந்த நிலைமையில் இருந்து பின் வாங்கியது. அம்பாறையை கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரிப்பதை அந்த மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்பவில்லை என்ற கடிதம் டெல்கிக்கு அனுப்பப்பட்டது. அவசரமாக எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் மூன்று கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளமன்ற உறுப்பினர்கள் மட்டுமே கைசாத்திட்டிருந்தனர். மேலும் அம்பாறை

www.tamilarangam.net

மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் பாராளமன்ற உறுப்பினர்களான அப்துல் மஜீத்தும் உதுமாலெப்பையும் கைசாத்திட்டிருக்கவில்லை. சிறிலங்கா அரசின் இந்த குத்துக்கரணம் இந்திய மத்தியஸ்தர்களை திகைக்க வைத்தது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த மாற்றத்திற்குப் பல காரணங்கள் இருந்தன. சிறிலங்கா அரசானது உள்நாட்டு அரசியலில் செய்யும் கபடத்தனங்கள் போலவே, வெளி நாட்டு அரசியலிலும் இந்தியாவின் செல்வாக்கைப் பாதிக்கக் கூடிய முறையில் இஸ்ரேல், பாகிஸ்தான் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் கூடிக்குலவுவது இந்திய அரசிற்கு அதிருப்தியைக் கொடுத்திருப்பதை சிறிலங்கா அரசு உணர்ந்திருந்தது. தனது நலன்களுக்காக இந்த ஏகாதிபத்திய நாடுகளுடன் நட்புறவு வைத்திருந்த சிறிலங்கா அரசு இந்திய தலையீடு இன்றி தனது உள் நாட்டுப் பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ள சந்தர்ப்பங்களை எதிர் பார்த்துக்கொண்டும் இருக்கின்றது. 1986களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலுள் ஊடுருவி விட்ட இந்திய எதிர்ப்பு சக்திகளின் நடவடிக்கைகளும், "சராக்" மாகாநாட்டிற்கு முன்னர் இந்தியப் பொலிசார் போராளிகள் மீது எடுத்த நடவடிக்கைகளும், சக இயக்கங்களை அழிப்பதன் மூலம் தம்மை தமிழ் மக்களின் ஏக தலைவர்களாக ஆக்கிக் கொள்ள புலிகள் மேற்கொண்ட நடவடிக் கைகளும், ஈழத்திலும், இந்தியாவிலும், அமெரிக்கா முதலிய வெளி நாடுகளிலுள்ள வலதுசாரி சக்திகள் அவ்வியக்கத்தை ஆதரிக்க ஆரம்பித்தமையும் சிறிலங்கா அரசு ஒரு புதிய தந்திரோபாயத் தை நடைமுறைப்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறிலங்கா அரசின் புதிய தந்திரோபாயம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இந்திய அரசு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்க்க மறுக்கும் சந்தர்ப்பத்தில், அவர்களை தமிழ் மக்களின் ஏக பிரதிநிகளாக ஏற்கின்றோம் என்ற மாயையை ஏற்படுத்தி, அவர்களுக்கும் இந்திய அரசிற்கும் இருக்கும் உறவுகளை சீரழித்து, அவர்களைத் தனிமைப்படுத்தி அழிப்பதே இந்தத் தந்தி -ரோபாயமாகும்.

தமிழீழக் கோரிக்கையை எந்தவகையிலும் விட்டுக்கொடுக்காமலும் தமிழர் தாயகம் ஒன்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற நிபந்த -னையின் பேரில் சிறிலங்கா வரசுடன் பேச்சு வார்த்தைக்குத் தயார் என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர், தமிழகமுதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு 1986 நவம்பர் 3 இல் எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து, பங்களூரில் நடைபெற்ற சந்திப்புக்களின் போது புலிகளின் தலைவருக்கு முதல் அமைச்சர் பதவி கொடுக்க ப்படலாம் என மறைமுகமாக அறிவித்ததுடன் இந்தச் சதிப்படலம் ஆரம்பமாகியது. இதன் உள் நோக்கங்களை விளங்கிக் கொள்ளாத ஈரோஸ் இயக்கத்தினரும் தமிழ் மக்களின் தலமை தமிழீழப் புலிகளு -க்கு வந்துவிட்டது என சோரத்தனமாக வார்த்தைக்கள் கூறினர்கள்

## தந்திரோபாயத்திற்கான காரணம்.

ஈழவிடுதலை இயக்கங்கள் "தாக்குதல் தப்பியோடுதல்" என்ற போராட்ட முறைகளைக் கடைப்பிடித் காலங்களில், அவற்றின் எதிரொலியாக சாதாரண பொதுமக்கள் மீது அரசபடைகளின் அட்டுளியங்கள் கட்டவிழ்துவிடப்பட்டன. 1986 நவம்பரில் தமிழீழ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலை இயக்கத்தினர் சாவகச்சேரி பொலிஸ் நிலயத்தின் மீது நடத்திய தாக்குதலின் பின்பு எடுக்கப்பட்ட தற்காப்பு நடவடிக்கைகள் அரசபடைகளுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இதைத் தொடர்ந்து கண்ணிவெடிகளைப் பாவித்து போராளிகள் நடத்திய தற்காப்பு யுத்தமானது ராணுவத்தினரின் நடமாட்டங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததுடன் அவர்களை முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கவும் செய்தது. அரசியல் ரீதியாக ஈழப் போராட்ட அமைப்புக்களுக்குள் ஏற்பட்ட ஐக்கியமும், ஈழத்தேசியவிடுதலை முன்னணியின் தோற்றமும் ஈழப் போராளிகளுக்கு சர்வதேச ஆதரவையும் அங்கிகாரத்தையும் ஏற்படுத்தியது. ஐக்கியப்பட்ட போராளிகளின் அரண்களை முறியடிக்க முடியாத அரசபடைகள் முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்தன.
ராணுவ ரீதியாக ஏற்பட்ட இந்த ஸ்தம்பித நிலமையை மாற்றுவதற்கு இயலாத சிறிலங்கா அரசாங்கம் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு இந்திய அரசின் உதவிகளை நாடியது. திம்புப் பேச்சு வார்த்தைகளில் போராளிகள் அனுமதிக்கப்பட்டது ஐக்கியமுன்னணித் தந்திரோபாயத்திற்கு ஏற்பட்ட பெரும் வெற்றியாகும். தமிழ் மக்களின் அரசியல் பேச்சாளர்களாக ஈழப்போராளிகள் அங்கிகரிக்கப்பட்டது அப்போதுதான். இதைத் தொடர்ந்து சிறிலங்கா அரசு மாகாணசபைகள் சம்பந்தமான பிரேரணைகளையும் முன் வைத்தது.

ஈழப்போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் முற்போக்கு இடதுசாரிக் கொள்கைகளுடைய இயக்கங்களும் மக்கள் ஆதரவுடன் வளர்ச்சி பெற்று சர்வதேச அங்கிகாரம் பெறுவதை, காலாகாலமாக

www.tamilarangam.net

முற்போக்கு இடதுசாரிக் கொள்கையுள்ளோரை ஒதுக்கி வந்த வலதுசாரித் தமிழர்களினால் ஜீரணிக்க முடியவில்லை. ஈழத்திலும், இந்தியாவிலும், அமெரிக்கா முதலிய மேற்கு நாடுகளில் உள்ள வலது சாரிச் சக்திகள் அரசியலின்றி ஆயுதத்திற்கு முதல் இடம் கொடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பின் அணிதிரளராயினர். போராளிகளின் ஐக்கியத்தினால் ஏற்பட்ட ராணுவஸ்தம்பித நிலமையை தங்களால் மட்டும் ஏற்படுத்தப்பட்ட நிலமையென்ப் பிராசாரம் செய்ததுடன் சக இயக்கங்களை அழிப்பதன் மூலம் தாம் தலைமைத்துவத்தைப் பெற்றுவிடலாம் எனவும் திட்டம் தீட்டினர். மாகாணசபைக்கான பேச்சு வார்த்தைகள் கொழும்பில் ஆரம்பமாகிய பொழுது தமிழீழ விடுதலை இயக்கத்தின் மீது தமது மிலேச்சத்தனமான தாக்குதலை ஆரம்பித்தனர். போராட்டத்திற்காக தம்மை அர்ப்பணித்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சொந்தசகோதரர்களினால் கொன்றொழிக்கப்பட்டார்கள். அதே சமயம் தளஅணிகளில் ஊடுருவிவிட்ட இந்தியவிரோத சக்திகள், தாம்படித்த 'இந்திய விஸ்தரிப்பு பாடங்களை சுவரொட்டிகளாக எழுதின. தலைமைப்பதவிக்காக தன் இனத்தையே கொல்லும் இயக்கம், தன்னுடைய சகுனித் தந்திரோபாய வலைக்குள் விழும் என சிறிலங்கா அரசு எதிர்பார்த்ததில் ஆச்சரியம் இல்லை.

நச்சு உறவுகள்.

சிறிலங்காராணுவத்திற்கு விறகு, தண்ணீர் கொடுக்கும் நடவடிக்கைகளாக ஆரம்பித்த உறவுகள், மன்னாரில் உயிரிழந்த ஒன்பது ராணுவ வீரர்களின் சடலங்களை கோட்டை முகாமில் கையளித்ததுடன் உறுதி-யாக்கப்பட்டது. இதையடுத்து கைதிகள் பரிவர்த்தனைக்கான ஏற்

www.tamilarangam.net

-பாடுகள் ஆரம்பமாகின. இந்த நேச உறவுகள் வளர்ந்து கொண்டிருந்த அதே வேளையில், ஈழப் பிரதேசத்திலுள்ள முற்போக்கு அமைப்புகள் மீது விடுதலைப் புலிகளின் படிப்படியான தாக்குதல்கள் ஆரம்பமாகின. மாணவ சக்திகளின் சிறகுகளை ஒடிப்பது போல பல்கலைக்கழக மாணவன் கடத்திச் செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டான். அடுத்தபடியாக ஈழப்போராட்டத்தின் இடதுசாரி அங்கமாக விளங்கிய ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் விடுதலைப் படையினரை நிராயுதபாணிகளாக்கிய பின்பு, டிசம்பர் 19-ம் திகதி கைதிகள் பரிவர்த்தனை நடைபெற்றது.

சிறிலங்கா அரசபடைகளின் முகாம்களை முற்றுகையிட்டு நின்ற சக இயக்கப் போராளிகளை பின்னால் நின்று தாக்கி, சிறிலங்கா அரசு செய்ய முடியாத ஒரு காரியத்தை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக நிறைவேற்றினர். இந்தச் சாதனைகளுக்கான மாலை மரியாதைகள் டிசம்பர் 24-ம் திகதி காங்கேசன்துறையில் நடைபெற்றது.

இந்த நச்சு உறவுகளின் உச்சக்கட்டமாக டிசம்பர் 19-ம் திகதி சிறிலங்கா அரசின் 'உத்தியோக பற்று அற்ற' தூதுக்குழு ஒன்று புலித் தளபதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. யட்டியாந்தோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் வின்சன்ட் பெரேரா, சட்டத்தரணி மார்க் பண்டோ, டயஸ அபயசிங்கா, பிரபல முதலாளி ஜயபால சிங்கம் ஆகியோர் இக் குழுவில் இருந்தனர். இந்தப் பேச்சு வார்த்தைகள் எந்தவிதப் பயனையும் அளிக்கவில்லை. ஆனால் சிறிலங்கா

www.tamilarangam.net

ஒரே வாரத்தில் கொழும்பில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கைதிகள் பரிவர்த்தனை, ஈழமக்கள் புரட்சிகர முன்னணி மீது நடைபெற்ற தாக்குதல்கள் பற்றிய செய்திக -ள் சற்றடே ரிவியூ பத்திரிகை யில் வெளியாகியது.

Registered as a Newspaper

Rs. 3.00

# Saturday Review SRI LANKA

Vol. 5 No. 48 20th December 1986

## CREMATION COSTS

The spiralling cost of firewood has led many people in the Jaffna Peninsula to a re-thinking on the process of cremation.

Earlier the price of a hundred weight of firewood was Rs 41/25. The lorry owners have lodged a complaint to the Chief of the Timber Corporation in Colombo that the price of Rs. 250/ paid for a metric ton of firewood is inadequate to meet the cost of transport. In keeping with this complaint the Jaffna Timber Corporation has upped the price to Rs. 375/- per metric ton and the consumers have to pay Rs. 61/60 per cwt. as from 16th December. So the consumers will have to pay the piper while the Corporation and lorry owners call the tune.

With human cadavers so cheap in the Peninsula, prospective cremation-seekers will probably have to evolve a cheaper way of cremation. Burials may be cheap but there is so little space even in the cemetery.

# THE FINAL ROUND

*(By a Special Correspondent)*

The question of setting up inter-provincial ministerial committees, as an alternative to the linkage of the Northern and Eastern Provinces demanded by the Tamil militant groups, was discussed at the meeting between representatives of the Sri Lankan and Indian Governments in Colombo this week, the SATURDAY REVIEW reliably understands.

As part of this process, the establishment of one High Court for the two provinces — another form of linkage — was also mooted at the talks, the SR understands.

What has been proposed, in the latest formulations between the two Governments, is no less than granting ALL the nine provinces in Sri Lanka the same powers enjoyed by all the states of India, including Tamilnadu, the SR understands.

The carving out of three districts in the Eastern Province—Trincomalee, Batticaloa and Amparai — into three district provinces to satisfy the aspiration of the Tamils, Muslims and Sinhalese communities was also discussed but it was described as impracticable because of the vehement opposition displayed by all three communities, the SR understands.

President Jayewardene led the Sri Lanka delegation at the talks held on 18th and 19th December. On the Indian side there were Mr. P. Chidambaram (Minister of State for Internal Affairs and Defence) and Mr. K. Natwar Singh (Minister of State for foreign affairs), along with the Indian High Commissioner in Sri Lanka Mr. J.N. Dixit.

The Indian Ministers had intensive talks with leaders of the militant groups based in Madras before they arrived in Colombo.

The Colombo talks took place in an atmosphere of both tension and great expectation among the Tamil people.

At Bangalore last month, President Jayewardene and Prime Minister Rajiv Gandhi explored ALL the possibilities of bringing about a settlement that would satisfy ALL the communities in Sri Lanka.

Will the Tamil militants' groups accept this package that has been wrapped up by the two Governments?

Unlikely, because they are insisting on the acceptance of the principle of a Tamil homeland.

They have been kept informed at every stage of the negotiations.

A pity is that representatives of the militant groups were not present at the talks, to directly express their views.

(Something which the SATURDAY REVIEW has always been saying is essential if the negotiations are to be brought to a successful conclusion.)

What if the latest round of talks also leads nowhere?

The Sri Lanka Government's position is that the latest proposals made by it "EMBODY THE MAXIMUM CONCESSIONS WHICH CAN REASONABLY BE MADE".

We believe there is still a chance to retrieve the situation — provided both sides act sensibly.

Otherwise, there is going to be chaos in Sri Lanka.



Capt. Jayantha Kotelawala

## TWO FOR TWO

In a dramatic development while the final stage of the talks on the ethnic issue were on in Colombo, there was, for the first time in the 10-year conflict a simultaneous exchange of prisoners-of-war between President Jayewardene's Government and the Liberation Tigers of Tamil Eelam (LTTE).

Two of the hundreds of Tamil youths held in captivity for long periods by the Government in Welikade were brought to Palaly and handed over to representatives of the LTTE. They were from a list of 15 names submitted by the LTTE.

Those released were Selasami Kumar alias Kunju, and Gamini Aunestine alias Tiru.

In return, the LTTE yesterday released the two Sinhalese soldiers who had been held captive by it since 12th October. (See SR of 25th and 1st November.)

Second Lieutenant Ajit Chandrasiri and Private M.H. Bandara were handed over to Capt. Jayantha Kotelawala by a LTTE delegation led by Captain Rabeem at the Jaffna Fort Camp at 8-20 a.m. yesterday.

Capt. Kotelawala played a key role in securing the release of the two soldiers.

# LTTE REIGNS SUPREME

On the eve of the Colombo talks on Sri Lanka's ethnic problem this week, the Liberation Tigers of Tamil Eelam (LTTE) has asserted its position as the main militant group which is open for business, serious business.

One by one, the LTTE has succeeded in decimating or liquidating or paralysing all the other groups operating in the North, except the Eelam Revolutionary Organisation (EROS).

The LTTE moved against the EPRLF on 13th December.

Within two days, the EPRLF cadres surrendered or vanished from the scene.

There were some casualties in certain areas (Mannar, Mullaitivu and Kilinochchi) where there was some resistance to the LTTE onslaught.

Some LTTE members also died but we do not have reliable information about the casualties on both sides, though it has been rumoured that at least 40 youths died in the struggle for power.

Sources close to the LTTE have adduced four reasons for their action.

The incident at Choolaimadu in Madras, where the EPRLF militants were involved in a "fracas", had alienated the Government of Tamilnadu. This action has sparked of the seizure of arms and equipment from the militant groups by the Tamilnadu police.

Further, the EPRLF had reportedly brought in the rump of the TELO group from India, numbering about 200, with a view to "destroy" the LTTE.

Rumours were said to have been set afloat by the EPRLF calculated to tarnish the image of the LTTE in the eyes of the people.

Finally, covert attempts had been made to eliminate the area commanders of the LTTE so that the EPRLF could gain control of the rank and file of the LTTE.

The truth will surface some time.

By which time all of us may be dead.

## SR ON HOLIDAY

**There will be no issue of the SATURDAY REVIEW on 27th December 1986 on account of the intervening holidays. The next issue will appear on 3rd January, 1987.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள்.



மாங்குளத்தில் சிறிலங்கா ராணுவம்....

www.tamilarangam.net

அரசு அதற்கு அவசியமான ராணுவரீதியான பலன்களைப்பெற்றது என்றே சொல்ல வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிறிலங்கா அரசினால் ஏற்கப் பட்டது ஒரு ராஜதந்திர வெற்றி என்ற மாயை ஏற்படுத்திய அதே காலத்தில் கிழக்கு மாகாணத்தில் அரச படைகள் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டன. 1987டிசம்பர் உடன் முடிவுற்ற ஒன்பது மாதங்களில் மூன்று றுக்கும் அதிகமான பயிற்றப்பட்ட ஈழ ப் போராளிகள் கொலை செய்யப்பட்டதும், பெரும் தொகையா னோர் நிராயுதபாணிகள் ஆக்கப்பட்டதும், கைதுசெய்யப்பட்டதும் ஈழத்தேசிய முன்னணி சிதைக்கப்பட்டதும், தமிழீம விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசிற்கு செய்த பேருதவியாகவே அமைந்தது.

மேலும் இந்த துரோகத்தனங்களில் இருந்து மக்களின் கவனங்களை திருப்பவும், ஈழப்போராட்டத்திற்கு சர்வதேசிய ரீதியாக இருந்த மனிதாபிமானமான ஆதரவைக் கெடுக்கவும், சிறிலங்காஅரசு தனது வெறியாட்டங்களை மறைத்தும் பிரசாரம் செய்யவும் ஈரோஸ் இயக்கத்தினரின் குண்டுவைப்புக்கள் பேருதவி புரிந்தன.

<u>பொருளாதாரத்தடை</u>.

ரெஜிஸ் டாபரே யின் "புரட்சியினுள் புரட்சி" என்னும் நூலை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட புலிஇயக்கத்தினர், அவன் கூறிய முக்கியமான மூலோபாயத்தைக் கைக்கொள்ளாமல் விட்டது இன்று எண்ணற்ற இளைஞர்களின் அழிவிற்கு இட்டுசசென்றுள்ளது. அரச படைகள் தனியிடத்தில் குவிக்கப்படும் பொழுது பலம் பெறுகின்றன. திக்குத்திக்கான தாக்குதல்களால் அரசபடைகள் நலாபக்கமும்

www.tamilarangam.net

பரந்த செல்லும் பொழுது பலவீனம் அடைகின்றன. பரந்த பரப்பில் செய்யப்படும் கொரிலாப் போரில் அரசபடைகள் பல வீனமடைகின்றன, ஒரு தனியிடத்தில் அரசபடைகளால் சூழப்படும் பொழுது போராளிகள் பலவீனமடைகின்றார்கள், என்பதே அவனது கருத்தாகும். யாழ் குடாநாட்டை மையமாக வைத்து நடத்தப்பட்ட போராட்டமும் இவ்வாறே பலவீனமடைந்தது.

1987 ஜனவரி முதல் விடுதலைப்புலிகள் வடக்கில், முக்கியமாக யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை பொறுப்பேற்கப்போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து யாழ்குடா நாட்டிற்கு அவசியமான எண்ணை, உணவு, மருந்து ஆகிய பொருட்களை அனுப்பப் போவதில்லை என சிறிலங்கா அரசு அறிவித்தது. வடகபகுதித் தமிழ் மக்கள் மீது பிரகடனப்படுத்தாத பொருளாதாரத்தடைகளை சிறிலங்கா அரசு நடைமுறைப்படுத்தி வந்ததை யாவரும் அறிவார்கள். தமிழ் மக்கள் மீது பட்டினியையும் துன்பங்களையும் சுமத்தி அவர்களை அடிபணிய வைப்பதே அரசின் நோக்கமாக இருந்தது. மக்களைப் பட்டினியால் வாட்டிய அதே வேளையில் தமிழ்ப் பகுதிகளில் ராணுவ நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டன.

ராணுவ முகாம்களின் அதிகரிப்பு

ஈழப்போராளிகளின் அணிகளில் ஏற்பட்ட பலவீனங்களை தனக்குச் சாதகமாகப் பாவித்த அரசு ராணுவரீதியாக முன்னேற ஆரம்பித்தது. வடக்கு மாகாணத்தில், முக்கியமாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள பிரதான வீதிகள் ராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. பரந்தன்

www.tamilarangam.net

குணுக்காய், அடம்பன், உயிலங்குளம், முரசுமோட்டை, உருத்திரபுரம் ஆகிய இடங்களில் புதிய ராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் இருந்து மூதூர் வரையும், மட்டக்களப்பில் இருந்து கல்லாடி வரையும் இருந்த ராணுவ முகாம்கள் படுவான்கரை கொகட்டிச்சோலைவரை அமைக்கப்பட்டன. இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்குள் 20 புதிய ராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், ராணுவ முகாம்களின் தொகை 201 ஆக உயர்ந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ராணுவ சமநிலை மாற்றத்தினால் ஏற்பட்டவிளைவுகள்.

பேச்சுவார்த்தைகளுக்கும், டிசம்பர் 19 பிரேரணைகளுக்கும் அடிப்-படையாக அமைந்த ராணுவ சமநிலைகளில் ஏற்பட்ட மாற்றத்தினால் சிறிலங்கா அரசு ஒரு ராணுவத் தீர்வை நோக்கி செயற்பட ஆரம்பித்தது. செல் தாக்குதல்களும், குண்டு விமானத்தாக்குதல்களும் அதிகரித்தன. ராணுவங்கள் முகாம்களில் இருந்து வெளியே வரமுயற்சித்தன. இந்த நிலமையிலும் சகஇயக்கத்தவர்கள் படுகொலைகள் தொடர்ந்தன.

விடுதலைப்புலிகளை ஏக இயக்கமாக அங்கிகரித்த வலதுசாரி சக்திகள் பேச்சு வார்த்தைகள் மூலமாக தீர்வுக்கு தமது முயற்சிகளை எடுத்துக் கொண்டுதான் இருந்தன. புலி ஆதரவாளராகிய இந்துப் பத்திரிகை ஆசிரியர் என். ராம், காமினி நவரத்தன (சற்றடே றிவியூ), அமெரிக்க "மோறல் றிஆமமன்ற்" இயக்கம் ஆகியோர் எடுத்த முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை.

"வேல்ட் கவுன்சில் அப் சேர்ச்சசஸ்" அனுசரணையுடன் 'சுதந்திரமா

www.tamilarangam.net

ன ஒரு தீர்வு 'க்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டன. பங்களூரில் நடைபெற்ற கூட்டத்தில், விடுதலைப் புலிகள் தவிர்ந்த மற்றைய இயக்கங்கள் கலந்து கொண்டன. இதைத் தொடர்ந்து இலங்கை செல்ல முயன்ற திரு. வி. ஆர். கிருஸ்ன அய்யர் (முன்னைநாள் நீதிபதி) சக்கார் (நீதிபதி), தார்குண்டே, ரி. என். கோபாலன், கென்றி திம்பாகினி (சட்டத்தரணி) ஆகியோருக்கு சிறிலங்கா அரசு அனுமதி வளிக்க மறுத்ததால் பின்னடைவுகள் ஏற்பட்டன.

கொழும்புக் கோட்டையில் நடைபெற்ற குண்டு வெடிப்புச்சம்பவத்தை காரணம் காட்டி சிறிலங்கா அரசு வெளிநாட்டுப் பிராசாரங்களை முடுக்கி விட்டதுடன், சாதாரண பொது மக்கள் மீதான குண்டுத் தாக்குதல்களை பன்மடங்காக அதிகரித்தது. இந்த ஆபத்தான சூழ் நிலைமைகளில், ஏப்பரல் 22 ம் திகதி ரஜீவ் காந்தியுடன் எம். ஜி. ராமசந்திரன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது டெல்கிக்கு அழைக்கப்பட்ட ஏ. எஸ். பாலசிங்கம் பேச்சுவார்த்தைகளுக்கான நிபந்தனைகளை முன் வைத்த பொழுது, சிறிலங்கா அரச படைகள் 1987 ஜனவரி 28-ம் இருந்த நிலைமைக்கு செல்ல வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார். டிசம்பர் 13 இல் ஈழமக்கள் புரட்சிகர முன்னணி மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய பின்பு, நான்கு மாதங்களில் போராளிகளின் ராணுவ அணிகளில் ஏற்பட்ட பின்னடைவுகளையே இது காட்டுகின்றது.

• • • •

இனவாத அரசின் விமானங்கள் குண்டு வீசி ஈழ மக்களின் உயிர்களை குடிக்கின்ற வேளையிலும் கூட போராளிகள் ஒன்றுபட்டு போராட முடியாத நிலையிருப்பது தமிழ் மக்களின் சாபக்கேடு என்றுதான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்ல வேண்டும். தலைமைகள் எவ்வாறு இருந்தாலும், தமது விடுத -லைக்காக தமது உயிர்களைப் பணயம் வைத்து போராடிக் கொண்டிருக்கும் போராளிகளுக்கு தமிழினம் என்றும் கடமைப்பட்டு -ள்ளது. ' அவர்களின் தெய்வங்கள் பொய்யாக இருக்கலாம், ஆனால் அவர்களின் பக்தி உண்மையானது. ' ஒரு இனம் ஒடுக்கப்படும் பொழுது ஒடுக்குமுறையாளர்களுடன் துப்பாக்கியால் பேச நிர்ப்ப -ந்திக்கப்படுகின்றது. ஆனால் அந்தத் துப்பாக்கிகளுக்கு சரியான அரசியல் வழிகாட்டல் இல்லாமற்போகும் பொழுது அந்த இனத்தின் சரித்திரம் இரத்தத்தினால் எழுதப்படுவது நியதியாகி விடுகின்றது.

கே. பி. ராஜ.

---




பார்த்திபன் எழுதிய குறுநாவல்

வித்தியாசப்படும் வித்தியாசங்கள்.

கிடைக்குமிடம்.

Südasien-Büro e.V.
Kiefern str. 45,
56 Wuppertal 2



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திர மாணவர் சங்கம்

## சிங்கள மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோள்

( தென் இலங்கையில் உள்ள பிற்போக்குவாத சக்திகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் அமைப்புகளில் சுதந்திர மாணவ சங்கமும் ஒன்றாகும். அதன் தலைவரான தயா பத்திரன, 1986 டிசம்பர் மாதம் கொலைசெய்யப்பட்டதுடன் பல முக்கிய அங்கத்தவர்கள் அரசினால் கைதுசெய்யப்பட்டும் உள்ளார்கள். ஆ-ர.)

முதலாளித்துவ இனவாத ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம், இந்த நாட்டில் வாழுகின்ற எமது சகோதரர்களான தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தும் இனவெறிப்போரானது பன்மடங்கு அதிகரித்துள்ளது. தேசம் முழுவதையும் யுத்த பீதியில் ஆழ்த்தியிருக்கும் ஜயவர்த்தன அரசாங்கத்தின் கீழ் தமிழ் மக்களின் உயிர்கள் கொடிய ராணுவத்தினரின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ராணுவம் இன்று வடக்கில் தமிழ் மக்களுக்கெதிரான படுகொலைகளை ஆரம்பித்திருக்கின்றது.

தென் ஆபிரிக்காவிலுள்ள மிலேச்ச வெள்ளை இனவாத அரசிற்கு எதிராக செய்யப்படும் பொருளாதாரத் தடைகளை எதிர்க்கும் தச்சர், றேகன், சியா உல்ஹக் ஆகிய ஆட்சியாளர்களுடன் கைகோர்த்துக் கொண்டிருக்கும் ஜயவர்த்தனவின் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை நடைமுறைப்படுத்துகின்

www.tamilarangam.net

றது. இராணுவ ரீதியாக மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியாகவும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதலானது, அவர்களை பட்டினியால் வாட்டி மேலும் மேலும் ஒடுக்குவதற்கேயாகும்.

இனவாத ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராகப் போராடும் தமிழ் விடுதலைப் போராளிகளினால் யாழ்ப்பாணப்பிரதேசம் விடுவிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றுவதற்காக போராளிகளின் இலக்குகளைத்தாக்குகின்றோம் எனக் கூறிக்கொண்டு சாதாரண பொது மக்களைப்படுகொலை செய்கின்றது இந்த அரசாங்கம். யாழ்ப்பாணத்தில் வாழும் சகல தமிழ் மக்களையும் கொன்று மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது அரசாங்கத்திற்கு அவசியமாக உள்ளது.

இந்த மிலேச்சத்தனமான மனிதப்படுகொலைகளை நியாயப்படுத்து முகமாக "பயங்கரவாதிகள்" அரசியல் தீர்வை ஏற்றுக்கொள்ளாமல் போரை நீடிக்கின்றார்கள் எனக்கூறுகின்றது. இது அப்பட்டமான பொய்யாகும். அரசியல் தீர்வு என அரசாங்கம் முன்வைப்பவை எல்லாம் பெரும் ஏமாற்று தந்திரங்களாகும். இலங்கையில் நடைபெறும் படுகொலைகளுக்கெதிரான அபிப்பிராயம் உலகில் வளர்ந்துவருகின்றது. இந்த உலக அபிப்பிராயங்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக பற்பல தீர்வுகளை முன் வைக்கவேண்டியது அவசியமா இருந்தும் கூட அது எந்தவித தீர்வையும் நடைமுறைப்படுத்த முன்வரவில்லை. தமிழ் மக்களை நிராயுதபாணிகளாக்கி அவர்களுக்கு எதிராக மனிதப்படுகொலைகளை நடத்துவதற்காகவே இந்தப்

www.tamilarangam.net

போலித் தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன. இத்தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்நிபந்தனையாக போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டுமென்றே கூறப்படுகின்றது. சிங்கள அரசாங்கங்களினால் தமிழ்மக்கள் காலாகாலமாக ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றார்கள். 1958, 1965, 1977 களில் அரசாங்கங்களினால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் ஒருபக்க சார்பாகக் கைவிடப்பட்டன. இந்த அரசாங்கத்தில் தமிழ்மக்களுக்கு எந்தவிதமான நம்பிக்கையும் கிடையாது. மேலும் வடக்கில் முப்படைகளும் நிலைகொண்டு இருக்கும் வரை இந்தப்போரை முடிவுக்குக் கொண்டுவரமுடியாது என நாம் சொல்லுகின்றோம்.

இந்தப் போலித் தீர்வுகளைத் திரையாகப் பாவித்துக் கொண்டு அரசாங்கம் அமெரிக்கா, பிரித்தானியா, இஸ்ரேல், பாகிஸ்தான் ராணுவ வீரர்களிடமிருந்து அறிவுரைகளையும் உதவிகளையும் பெற்று யாழ்ப்பாண மக்களுக்கெதிரான மாபெரும் கொலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது. யாழ்ப்பாண ஆஸ்பத்திரி மீது கூட குண்டுகளை வீசியுள்ளது. தமிழ் மக்கள் இன்று மரணத்தின் வாயினுள் அகப்பட்டுள்ளார்கள்.

மேலும் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கெதிராகவும் அடக்குமுறை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. சமீப காலங்களில் தொழிலாளர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மலையகமக்களின் நிர்ப்பந்தத்தினால் அவர்களின் பிரஜாஉரிமைக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் இன்னும் அவர்களுக்கு பிரஜாஉரிமை வழங்குவதற்கான நடவ

www.tamilarangam.net

டிக்கைகளை எடுக்கவில்லை. இந்த நிலைமையில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அனுசரணையுடன் ஒரு பிரார்த்தனைப்போராட்டத்தை நடத்தியுள்ளார்கள். தெய்வீகத்தில் நாம் நம்பிக்கையற்றவர்களாக இருந்தாலும் கூடத் தொழிலாளர்கள் தமக்கு உகந்த விதத்தில் தமது உரிமைகளுக்காகப் போராடும் உரிமையுடையவர்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளுகின்றோம்.

வடக்கில் இனஒழிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தும் படியும், இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காணும் நோக்கங்களை விட்டு அரசியல் தீர்வு ஒன்றைக்காணும்படியும், மலையக மக்களின் பிரச்சனைகளுக்கு முறையான தீர்வு கண்டு அவர்களைத் துன்புறுத்துவதை உடனடியாக நிறுத்துமாறும் அரசாங்கத்தினை வற்புறுத்துமாறு நாம் சிங்களப் பொதுமக்களை வேண்டுகின்றோம்.

(சிங்களத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது).

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சகல விடயங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.


| | |
|---|---|
| ஆசிரியர் குழு, | Editors, |
| சிந்தனை | SINTHANAI |
| ஒல்கா ஸ்ராஸா, 49 | Olga str 49, |
| 7 ஸ்ருட்காட் 1, | 7-Stuttgart 1. |
| மேற்கு ஜேர்மனி. | West Germany. |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய இனப்பிரச்சனையை தீர்த்த பின்புதான் தேர்தலைப் பற்றிப் பேசமுடியும்.....



அ. அமிர்தலிங்கம்.

— தமிழர் விடுதலைக் கூட்டணி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் மக்கள் மடிந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் எந்த விதமான தேர்தல்களிலும் எமக்கு அக்கறை இல்லை என கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எந்த விதமான தேர்தலிலும் யாழ்ப்பாணத்தில் பங்குகொள்ள தாம் அனுமதிக்கப் போவதில்லை என தமிழீழ விடுதலைப் புலியினர் கூறியிருந்ததைப் பற்றிக் கேட்கப்பட்ட பொழுது, "அப்படி அவர்கள் கூறியிருந்தால் அது எப்படி ஜனநாயகமாகும்?" என வினவிய அவர், "தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டியவர்கள் யார் என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டுமே ஒழிய, எந்த ஒரு குழுவுமல்ல.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்கள் உரிய காலத்தில் தமது தீர்ப்பைக் கூறுவார்கள் "எனப் பதில் கூறினார்.

(சனி)

www.tamilarangam.net

# ஒரு பொதுத் தேர்தலின் மூலமே நெருக்கடிக்கு முடிவுகாண முடியும்....

## திருமதி. சிறீமாவோ பண்டாரநாயக்கா



"ஐக்கிய தேசிய கட்சிக்கு 'பயங்கரவாதம்' அவசியமானது ஆகிவிட்டது" என சர்வதேசப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினார். 1982 இல் இந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்காக நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பின் போது பலாத்காரமும் ஊழல் நடவடிக்கைகளும் இடம் பெற்றதாக தேர்தல் ஆணையாளர் தமது அறிக்கையில் கூறியிருந்ததை மேற்கோள் காட்டிய அவர், ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருக்கத் தகமையற்றது எனவும் கூறினார்.

மீண்டும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அரசாங்கத்தின் பதவிக்காலத்தை நீடிக்கப் போவதாக ஜனாதிபதி அறிவித்திருந்ததைப் பற்றிக்கூறுகையில், 'ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தக்கூடிய சூழ்நிலைகள் நாட்டில் இருக்குமானால், ஒரு பொதுத் தேர்தலை ஏன் நடத்த முடியாது?' என அவர் வினவினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு கொடுத்த வாக்குறுதிகளை

www.tamilarangam.net

இந்த அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதாலேயே அவர்கள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்தார்கள். பின்பு 6வது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின் மூலம் அவர்கள் பாராளுமன்றத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். இன்று நாட்டிலுள்ள அரசஎதிர்ப்புச்சக்திகளின் குரல்கள் பாராளுமன்றத்தினுள் கேட்க்கமுடியாமல் இருக்கின்றது.

இந்தப் பாராளுமன்றம் இன்று நாட்டிலுள்ள அரசியல் நிலமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை... இன்று ஒரு தேசிய நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும், சகல ஜனநாயக தேசபக்த சக்திகளும் ஒன்றுபட வேண்டியது அவசியம் என்று கூறுவது உண்மையாக இருக்கலாம். ஆனால் சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஒரு ஜனநாயகவிரோத அரசாங்கத்துடன் ஒத்துழைக்கத் தயாராக இல்லை.

ஒரு பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் புதிய பாராளுமன்றத்திலேயே இன்றைய நெருக்கடிகளைத் தீர்க்ககூடிய முடிவுகளைச் செய்ய முடியும். ஆனால் இந்த அரசாங்கம் ஒரு பொதுத் தேர்தலை நடத்த 'விரும்பவில்லை. 'பயங்கரவாதத்தை' காரணம் காட்டி பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கவே விரும்புகின்றது' என அவர் கூறினர்.

(ஐலண்ட்)

**சிந்தனை**யில் வெளியாகும் கையெழுத்துடன் கூடிய ஆக்கங்களின் கருத்துக்கள் அவற்றை ஆக்கியோரின் சுதந்திரமான கருத்துக்களே.

ஆசிரியர் குழு.

www.tamilarangam.net

# மே தினம்

மே தினம் உழைக்கும் தொழிலாளர்களின் உரிமைக் குரல் எழுப்பும் தினம். ஒடுக்கும் முதலாளி வர்க்கத்திற்கு எதிரான கடந்த காலப் போராட்டங்களின் ஐந்தொகை பார்க்கும் தினம். வரும் காலப் போராட்டத்திற்கு வழிவகுக்கும் தினம்.

இந்த மேதினத்தின் வரலாறு 1886-இல் அமெரிக்கத் தொழிலாளர்களின் எட்டு மணித்தியால வேலைக்கான போராட்டத்துடன் ஆரம்பமாகியது. அன்றைய தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் பத்துப் பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக வேலைசெய்ய வேண்டியிருந்தது. வேலைநேரத்தை நீடித்து தொழிலாளர்களின் உபரி உழைப்பை முதலாளிகள் சுரண்டிக் கொண்டிருந்தனர். இந்த சுரண்டலுக்கு எதிரான போராட்டங்கள் பெரும் வேலைநிறுத்தங்களாக வெடித்தன. அமெரிக்காவில் சிக்காகோ என்னும் நகரில் கேமார்கட் என்னும் இடத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் குழப்பம் விளைவிக்கும் நோக்கத்துடன் பொலிஸ் ஏஜன்ட் ஒருவன் பொலிசார் மீது குண்டுஒன்றை வீசினான். அப்போது ஏற்பட்ட குழப்பத்தில் பொலிசார் தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் எத்தனையோ தொழிலாளர்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளர் இரத்த வெள்ளத்தில் மடிந்தனர். ஆட்சியாளர்கள் நான்கு தொழிலாளர் தலைவர்கள் மீது பொய் வழக்குத் தொடர்ந்தனர். முதலாளித்துவ நீதிமன்றம் அவர்களுக்கு மரணதண்டனை விதித்தது. 1887-ம் வருடம் நவம்பர் மாதம் 11ம் திகதி உலக உழைக்கும் வர்க்கத்திற்காக அவர்கள் தம் வாழ்வைத் தியாகம் செய்தனர்.

1890 ம் ஆண்டு சோசலிச சர்வதேச இயக்கம் (அகிலம்) மே முதலாம் நாளை உலகத் தொழிலாளர் தினமாகக் கொண்டாடத் தீர்மானித்தது. அன்று கேமார்கட் வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட தோழர் அல்பேர்ட் ஆர். பார்சன் நீதிமன்றத்தில் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதியைக் கீழே தருகின்றோம்.

. . . . .

தோழர் அல்பேர்ட் பார்சன் : நான் ஒரு சோசலிசவாதி. நான் ஒரு கூலிபெறும் அடிமையாக இருந்தும் கூட, அந்தக்கூலிபெறும் அடிமைத்தனத்திலிருந்து தப்பித்து, மற்றவர்களின் உழைப்பின் உடமையாளனாக வருவதை தவறென—எனக்கு நான் இழைக்கும் தவறென, எனது அயலவனுக்கு இழைக்கும் தவறென—கருதுபவர்களில் நானும் ஒருவன். அப்படிச்செய்ய நான் மறுக்கிறேன்.

நான் வேறு ஒரு வாழ்க்கைப் பாதையைத் தேர்ந்து எடுத்திருந்தால் சிக்காக்கோ நகரின் நிழல் நிறைந்த தெரு ஒன்றில் ஒரு சுகபோக மாளிகையில் ஆளடிமை புடைசூழ வாழ்ந்து கொண்டிருப்பேன் ஆனால் நான் வேறு வாழ்க்கைப் பாதையைத் தேர்ந்தெடுத்தேன். அதனால் இன்று இங்கு தூக்குமேடையின் முன் நிற்கிறேன். இதுதான் என்னுடைய குற்றம். உயரே இருக்கும் பரலோகத்திற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன் இது ஒன்றுதான் என்னுடைய குற்றம். முதலாளி வர்க்க சமுதாயத்தில் இன்று நிலவும் முறைகேடுகளுக்கு முன் நான் ஒரு போலி. நான் ஒரு பொய்யன். நான் ஒரு துரோகியும் கூட. இது உங்கள் தீர்மானத்தின்படி குற்றமென்றால் நான் குற்றவாளிதான்.

இப்பொழுது நான் சொல்வதை பொறுமையோடு செவிசாய்யுங்கள் உங்களிடம் நான் அப்படி நடந்து கொண்டேன். வழக்கு விசாரணையின் போது நான் பொறுமையுடன் இருந்தேன். தயவு செய்து சிறிது கவனியுங்கள். இந்த முதலாளித்துவ தொழில் அமைப்பு முறையில் நடைபெறும் ஒடுக்கு முறைகளைப் பாருங்கள்.

இன்று காலை எனது தோழன் பீட்டமன் விபரித்தது போல ஒவ்வொரு புதிய இயந்திரமும் உழைக்கும் மனிதனுடன் போட்டியிடவே தோற்றுவிக்கப்படுகின்றது. முதலாளித்துவ அமைப்பில் தொழில்களில் அறிமுகப்படுத்தப்படும் ஒவ்வொரு புதிய இயந்திரமும், தன் உழைப்பை விற்றுத் தன் உணவைத்தேடும் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் போட்டியாகவும், தடையாகவும், அபாயமாகவும் அவனைச் சூறையாடவே வருகின்றன.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணித்தியாலமும் புதிய இயந்திரங்கள் தொழில் முறைகள் எல்லாவற்றையும் முற்றாக மாறி அழித்து விடுவதனால் மனிதன் பட்டினியின் விளிம்பிற்குத் தள்ளப்படுகின்றான். இது தான் நடைமுறை. நான் எனது சொந்த வாழ்க்கைச் சரித்திரத்தில் இருந்தே (நான் இன்னும் ஒரு இளைஞன்) இயந்திரங்களின் தோற்றத்தினால் தொழிற்றுறைகள் நிர்மூலமாக்கப்படுவதைத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த மக்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே போனூர்கள்? அவர்கள் மற்றைய தொழிலாளர்களுக்கும் போட்டியாளர்களானூர்கள். இதனல் கூலிகளைக் குறைக்கவும் வேலை நேரத்தை நீடிக்கவு-ம் முடிந்தது. அவர்களில் பலர் உங்களின் சிறைக்கூடங்களுக்கும் பலிபீடங்களுக்கும் தகுந்த அபேட்சகர்களாக மாறிக்கொண்டு இருக்கின்றூர்கள். குற்றம், கொடுமை மரணம் என்ற பெரும்சாலையில் இவர்கள் வந்து கொண்டிருக்கின்றூர்கள். இவர்களுக்காக சிறைக்கூடங்களைக் கட்டுங்கள். தூக்குமரங்களை நாட்டுங்கள்.

மேன்மை தங்கியவர்களே,

ஒரு போதும் காரணமின்றிக் காரியமாவதில்லை. மரத்தை அதன் பழுத்திலிருந்துதநாம் தெரிந்து கொள்கின்ரேம். சோசலிசவாதிகள் குருட்டுத்தனமாக கண்களை மூடிக்கொண்டு பார்க்க மறுப்பவர்களுமல்ல, காதுகளை மூடிக்கொண்டு கேட்க மறுப்பவர்களுமல்ல. பார்ப்பதற்கு கண்கள் இருப்பதனல் அவர்கள் பார்க்கிருர்கள். கேட்பதற்குக் காதுகள் இருப்பதனல் அவர்கள் கேட்கின்ருர்கள்.

இந்த முதலாளித்துவ அமைப்பைப் பாருங்கள், சிறிய வர்த்தகர்களையும், சிறு தொழில் செய்பவர்களையும், மத்தியதர வர்க்கத்தின-ரையும் என்ன செய்திருக்கின்றது?

11,000 சிறு தொழில் செய்வோர் பொருளாதார ரீதியாகக் கடந்த பன்னிரண்டு மாதங்களில் நிர்மூலமாக்கப்பட்டனர் என "பிராட்ஸ்ரீட்" அறிக்கை கூறுகின்றது. இவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் ஏன் அழிக்கப்பட்டனர்? செல்வம் குறைந்ததால் இது ஏற்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்டதா? இல்லை. இவர்கள் வைத்திருந்த செல்வம் இன்னுமொருவர் கைக்கு மாறியது. இந்த 'இன்னுமொருவர்' யார்? அதிக மூலதன வசதிகள் உள்ளோரே அவர்கள். அவர்கள்தான பெரும் ஏகபோக முதலாளிகள். எல்லாத்துறைகளையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள். இவர்களை (சிறு தொழில் செய்வோரை) நெரித்துக் கொன்று அப்புறப்படுத்தி, இறந்த ஈக்களைப் போல் தம் பையில் போட்டு விடுகின்றனர்.

இப்படியாக அழிக்கப்பட்ட மத்தியதரவர்க்கத்தினர் கூலியாட்களாக மாறுகின்றனர். அதுதான் என்ன? அவர்கள் தொழிற்சாலை வாசல்களில் காவலிருக்கின்றனர். கூலி உழைப்பாளிகள் செய்யும் தொழில்களைத் தேடுகின்றனர். விளைவு என்ன? பல உழைப்பாளிகள் சந்தைக்கு வருகின்றனர். வேலைதேடுவோர் தொகை அதிகரிக்கின்றது. பட்டினியின் விளிம்பிற்குப் போகும் அளவிற்கு தொழிலாளர்களின் கூலிகள் குறைக்கப் படுகின்றன.

மேன்மை தங்கியவர்களே,

சோசலிசம், மக்கள் மத்தியில் வந்து இவற்றைப் பார்க்கும்படி கேட்கின்றது. விவாதிக்கின்றது. நியாயம் கேட்கின்றது, பரிசீலனை செய்கின்றது. ...........

(ஆசிரியர், 'முன்வழி'ப் பத்திரிகையில் 1981 மே இதழில் எழுதிய கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போதனை





உழைக்கும் வர்க்கம்
அதன்
முதுகில் தாக்கம்

வியர்வை துலங்கும்
நெற்றி
சோகம் அவர்களைச்
சுற்றி

இருளால்
இவர்கள் தாக்கம்
விடிவை
எண்ணி ஏக்கம்

பங்கை மறுத்து
எதிரி
நீட்டினன் மண் கை
அதனை
கங்கை அவர்களின்
கண்களின் தங்கை


கூலி மறுத்ததால்
எரித்தனர்
முள்வேலி
கேலி செய்ததால்
சரித்தனர்
கருங்காலி



தொடராய் வந்தது
சோதனை
வெட்டிப் புதைத்தனர்
வேதனை
செய்து முடித்தனர்
சாதனை

மே தினமே
நீ
சொல்வதுதானே
இந்தப்
போதனை.

— சிவம்.



www.tamilarangam.net




யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இடதுசாரிகளின் மேதின ஊர்வலம்.





கொழும்பில் தடையை மீறிச் செல்ல முனைந்த ஊர்வலம்.

www.tamilarangam.net




சமசமாஜக்கட்சி,
கம்யூனிஸ்ட் கட்சி,
மக்கள்கட்சியினரின்
ஊர்வலமும்....






அதைத்தடுத்த பொலிசாரும்.....


www.tamilarangam.net



இலங்கை சமசமாஜக் கட்சியின் காரியாலயத்திற்கு எதிரில்
நடைபெற்ற பொலிசாரின் தாக்குதல்கள்...........



www.tamilarangam.net



இலிகிதர் சேவைச் சங்கத்தினரின் காரியாலயத்தின் முன் பொலிஸ் தடை..



 சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தின் கூடிய மக்கள்.

www.tamilarangam.net



மேதினக் கூட்டத்தில் தோமர் பாலா தம்பு.



தாக்குதலின் போது காயமுற்ற கொலின் ஆர்.டி.சில்வா.

www.tamilarangam.net



நரெகம்பிட்டியாவில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது மாணவன் ரணவக்கவும் தொழிலாளி லெஸ்லி வெனவத்தவும் உயிரிழந்தார்கள்.



www.tamilarangam.net

# சிந்தனையின் தாக்கம்

சிந்தனையின் தாக்கத்தை வாசகர்களிடமிருந்து வரும் கடிதங்களின் மூலம்தான் எடைபோட முடியும். சகல கடிதங்களையும் முழுமையாகப்பிரசுரிக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் இடப் பிரச்சனையேயாகும். முக்கியமான கடிதங்களையும் இக்கடிதங்களுடன் வரும் கட்டுரைகளையும் இப்பகுதியில் பிரசுரிக்க முயற்சி செய்வோம்.

"சிந்தனை" 86 மாசி இதழ் ...வாசித்தேன். தொடர்ந்து வெளி யாகும் இதழ்களை வாசிக்க ஆசைப்படுகின்றேன்... வெளியாகியவு டனே ஒவ்வொரு இதழ் எனக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்.
பிரேமன்.

சு. ஜெகநாதன்

...நண்பர் மூலமாக "சிந்தனை" இதழை வாசிக்க முடிந்தது. நீங்கள் கேட்டுக் கொண்டபடி பத்திரிகை நறுக்குகளை அனுப்பி வைத்துள்ளேன்.... தொடர்ந்து பத்திரிகை அனுப்பி வைக்கவும்.
பாழ்ப்பாணம்.

பாரதி

....சிந்தனைப் புத்தகம் பார்த்தேன்... தொடர்ந்து படிக்க வேண்டுமென்று ஆவலாக உள்ளது.... அத்துடன் எவ்வளவு பணம் அனு ப வேண்டும் என்ற விபரத்தையும் அறியத்தரவும்.
..அரசியல் தஞ்சம் கோரி வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் சிந்தனைகள் வேறுவிதமாக மாறும் இவ்வேளையில் உங்கள் சிந்தனை இதழ் அவர்களை நாட்டைப்பற்றி சிந்திக்க வைக்கின்றது. உங்களது முயற்சி மேலும் தொடர எங்கள் உதவி கிடைக்கும்.
ஸ்விசன்.

சசிகரன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

...உங்கள் பெண்கள் இதழ் எங்களைச் சிந்திக்க வைத்தது...

யாழ்ப்பாணம் கார்த்தி.

சிந்தனை ஆசிரியர் குழுவிற்கு,

தங்கள் முதல் இதழ் பெற்றுக்கொண்டேன். எமது புகலிடச் சூழலில் வெறும் பூர்சுவாச் சிந்தனைகளைத் தாங்கி, நிலவுடமைச் சமுதாயத்தின் எச்சசொச்சங்களைப் பேணிப்பாதுகாப்போராகத் தமிழ் மக்கள் சென்று கொண்டிருக்கையில், எமது போராட்டம், அதன் யதார்த்த நிலைப்பாடு, சிங்கள பேரினவாத அரசின் ஒடுக்குமுறைகள் போன்றவற்றையெல்லாம் சிந்திப்பதையெல்லாம் விட்டு, அரசியல் புகலிடம் தேடியோர் கவனங்கள் வேறு திசையில் திருப்பப்பட இந் நாட்டு சூழல்கள் அமைந்திருக்கின்ற வேளையில், சிந்தனை போன்ற சிறு இதழ்கள், எமது போராட்டத்தின் பொதுத்தன்மை, யாவரும் அவசியம் அறிந்திருக்க வேண்டிய அரசியல் அம்சங்கள் போன்றவற்றைத் தாங்கி, ஒரு சிந்தனைச் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

பல்வேறு வர்க்கச் சார்படிப்படையில் தோற்றம் பெற்றுவிட்ட இயக்கங்களில் சிலவற்றில் ஏதோ ஒரு பொதுத்தன்மை முற்போக்குச் சிந்தனை, விஞ்ஞான ரீதியான அரசியல் சித்தாந்தம் அதற்கேற்றவாறான நடைமுறை போன்றவற்றைக் காணமுடிகிறது. இருப்பினும் தத்துவார்த்த முரண்பாடுகள், நடைமுறைப்படுத்தல் முரண்பாடுகள், வர்க்க சார்பு முரண்பாடுகள் இறுதிவரை இருந்தே தீரும். ஆயினும் இவ்வித முரண்பாடுகளே தமிழினத்தின், உழைக்கும் வர்க்கத்தின் போராட்டத்தில் ஒரு விஞ்ஞானரீதியான கண்ணோட்டத்தையும், முற்போக்கு அரசியலில் ஒரு விழிப்பையும், சாதகமான அகச்சூழலையும் உருவாக்கும். இவ்வாறான முரண்பாட்டுக் காலத்தையும் தோழமைக்கும், ஐக்கிய முன்னணியை உருவாக்கவும் பயன்படுத்தச் சகல முற்போக்கு இயக்கங்களும் இன்னும் வளர்ச்சியடைய வேண்டும். எனவே முற்போக்கு மனோநிலை கொண்டோரிடத்தில் ஒரு தோழமை உணர்வு உருவாகவும், கருத்து மோதல் களங்கள் அமைத்து அவற்றினூடாக ஆழமான பயன்பாட்டுத் தத்துவங்களைக் காக்கவும் சிந்தனை வழிசெய்யுமாயின் மக்களிடத்தில் செல்லும் என்பது எனது கருத்து. தங்கள் முயற்சிக்குப் பாராட்டுகள்.

வாசகன்

பேர்லின்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழப்போராளிகளின் அன்னியப்பாடு

விடுதலை இயக்கங்களில் இருந்து நாளாந்தம் உதிரிகளாகவும், சிலவேளைகளில் கூட்டம் கூட்டமாகவும், வெளியேறுவதும் விடுதலைப்போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தப்படுவதும் சர்வசாதாரணமாகிவிட்டன. இவ் வெளியேற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் இயக்கங்கள் திணறுவது கண்கூடு. எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தில் இன்று அரசியல் ரீதியான நெருக்கடிகளும், சடத்துவ ரீதியான நெருக்கடிகளும், மற்றும் பல்வேறு சிக்கல்களும் போராட்டத்தினை நீட்டிச்செல்கின்றன. இந்நிலையில் இயக்கப் பெ ாடியன்களின் திடீர் திடீர் வெளியேற்றங்கள் இயக்கத் தலைமைகளுக்கு பெருத்த தலைவலியினை உண்டுபண்ணி உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

உதிரிகளாகவோ அல்லது கூட்டமாகவோ வெளியேறுபவர்கள் பல்வேறு காரணங்களை சுட்டி நிற்கின்றனர். மொத்தத்தில் ஈழவிடுதலைப் போராட்டம் பற்றிய உணர்வு ரீதியான அரசியல் தெளிவின்மை, நெறிப்படுத்தப்படாமை, இவைதான் இவைகளின் வெளியேற்றங்களுக்கும் அந்நியப்படுதலுக்கும் அடிப்படைக் காரணங்களாக அமைய முடியும். மாக்சிய லெனினிச அடிப்படைப் பார்வைகள், குறைந்தது சமுதாயப் பார்வையாவது இல்லாத எந்த ஒரு பே ாராளியாலும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் நின்று பிடிப்பதென்பது கடினமானது. பொதுவாக எந்த ஒரு பிரச்சனைக்கும் (தனி நபர் பிரச்சனைக்கும் கூட) முடிவான தீர்வினை உருவாக்குவதென்பது முடியாது. ஈழத்தில் மக்களுக்கும் போராளிகளுக்குமான முரண்பாடுகள், அந்நியப்படுத்தல்கள் என்பன இதற்கு சான்றாக அமையும்.

ஈழவிடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கையிழத்தல், விரக்தியடைதல், இவற்றின் காரணமாக சுயநலம் தலைதூக்கல், இவை பெரும்பாலான போராளிகளை பற்றிக்கொண்டு பெரிய மனப் போராட்டத்தினை உருவாக்கி உள்ளது. நம்பிக்கை இழத்தல் சுயநலம், விரக்தி இவைதவிர, உள்முரண்பாடுகளின் தாக்கத்திலால் உயிராபத்துக்களை சந்திக்க நேரிடும் என்ற காரணத்திலால் வெளி

www.tamilarangam.net

யேறுபவர்கள் உண்டு. இதுதவிர தலைமைகளின் போக்குகளை விமர்சனம் செய்தல் கண்டிப்பவர்கள் அவர்களின் அத்தீவிர போக்குகளின் காரணமாக உட்கட்சிப் போரில் வெற்றி பெறும் வாய்ப்புக்கள் சிக்கலடைந்த ஆயுதபிதியிலை வெளியேறுகின்றனர். (இந்த வகையினர் தனித்து சிந்தித்து முடிவு எடுக்கக் கூடியவர்கள். மனிதாபிமானப் பண்புகளில் இன்றைய தலைமையினை விட விஞ்ஞான ரீதியாக வளர்ந்தவர்கள்.) இதற்கு PLOTE வசந்தன் TELO மனோ மாஸ்டர் வெளியேற்றம் என்பன சான்றுகள்.

மன உள ரீதியான பாதிப்புகள், உடல் உயிர் ரீதியான பாதிப்புகள், மற்றும் வளர்ச்சிக்கு தடையான பாதிப்புகளின் காரணமாக உதிரிகளின் வெளியேற்றங்கள் அமைகின்றன.

1) முதலாளித்துவ இராணுவ நிர்வாக முறைகள் போராளிகளின் மீது திணித்தல், ஏவல் கட்டளை முறைகளில் நடந்துகொள்ளல்.

2) பிரதேச வேறுபாடுகள் விரிவடைவதன் காரணமாக இயக்கத்தினுள் கோஸ்டிகளாகப் பிரிதல், இதன் காரணமாக நம்பிக்கை இழத்தல், விரக்தி என்பன ஏற்படுகின்றன.

3) தலைமைகளின் சரிபிழைகளை விமர்சித்தல் இதன் காரணமாக இயக்கத்தின் உளவுப்பிரிவு எனப்படும் சித்திரவதைப் பிரிவின்மூலம் சிறிலங்கா இராணுவச் சித்திரவதைகளுக்கு சித்திரவதைகள் பலி எடுப்புக்கள் என்பன நிகழ்கின்றன. இதனால் பலர் உயிருக்கு அஞ்சி வெளியேறுகின்றனர்.

4) இயக்கங்களின் ஒழுங்கமைக்கப்படாத, திட்டமிடப்படாத, தாக்குதல்களினால் பெரும்பான்மை மக்களின் உயிர் இழப்புக்கள் தொடர்கின்றன. இதனால் நம்பிக்கை இழந்து வெளியேறுகின்றனர்.

5) இயக்கத் தலைமை நிர்வாகிகள் இடையே சீனியாரிட்டி ஜூனியாரிட்டி பகுப்பாய்வுகள் காரணமாக விரக்தி நம்பிக்கை இழத்தல் காரணமாக வெளியேறுதல்.

இந்நிலையில் பெரும்பாலும் வெளியேற்றங்களைத் தடுப்பதற்கும், போராட்டத்தினைத் திட்டமிட்டு நடாத்துவதற்கும் இயக்

www.tamilarangam.net

கங்களின் முதலாளித்துவ நிர்வாக முறைகள் மாற்றியமைக்கப்பட்டு மாக்சிய, லெனிய அடிப்படைப்பார்வைகளுடன் மக்கள் நிர்வாக முறைகளை ஏற்படுத்தல்தான் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

அன்றும் இன்றும் வெளியேறுபவர்களுக்கு இயக்கங்கள் கொடுத்து வந்த தீர்வுகள் காட்டுமிராண்டித்தனமானவையே. அதில் அன்றைவிட இன்று வெளியேறுபவர்களின் தொகை பெரிது. இன்று தலைமைகளில் உள்ளவர்களில் பலருக்கு அரசியல் தெளிவின்மை, பதவி ஆசை. இதன் காரணமாக ஒழுங்கமைக்கப்படாத நிர்வாக முறைகள், புத்திஜீவிகளை உள்வாங்குவதற்கு அஞ்சுதல் என்பன பெரும்பான்மையான வெளியேற்றங்களுக்கு காரணமாகின்றன. விமர்சனம், சுயவிமர்சனம், உட்கட்சி ஜனநாயகம் என்று வரிக்குவரி எழுதும் இயக்கங்களில்கூட வெளியேறுபவர்களுக்கு தீர்வு அடி, உதை கொலை.....

இந்த வகையான முதலாளித்துவ நிர்வாக முறைகளைத் தவிர்த்து இன்று செயற்படும் இயக்கத்தில் EROS & NLFT வளர்ச்சி பெற்றுள்ளது. சரியான மக்கள் அரசியல் கோட்பாடுகளை கடைப்பிடித்து செல்ல மறுக்கும் இயக்கங்கள் குழுக்களேதான். இதற்கு மேல் ஒரு மக்கள் தாபனமாக இவர்களால் வளரமுடியாது.

ஆக சிந்திப்போம். தனிநபர் வணங்கலை முறியடிப்போம் முதலாளித்துவ நிர்வாக முறைகளைக் களைந்து மாக்சிய லெனிய அடிப்படைப்பார்வைகளுடன் கூடிய ஒரு புரட்சிகர மக்கள் தாபனத்தை கட்டி எழுப்புவோம்.

**திருச்சி** 　　　　　　　　　　　　　　　　**தளசி.**

**தென்இந்தியா.**

www.tamilarangam.net

# ஈழத்து அகதி

கரிய முகத்திரை நீக்கி
துயின்று கிடந்த பூமியின் இதழில்
ஆதவன் முதல் முத்தம் பதித்தான்,

அலைகள் எறிந்து
வெண் திரை ஏந்தும்
நீலக் கடலின் பாதையை மறித்து
கொட்டிக் கிடக்கும்
வெண் மணல் பின்னே
நம்பிக்கை துலங்கும்
இராமேஸ்வரத்துக் கோபுரமாக.

சுறுக்கள் கழுகுகள் என
தமிழரின் பிணங்கள் ருசிப்பட்டலையும்
சிறீலங்காவின் படகும் விமானமும்
பாதாளத்தில் எங்கோ வீழ்ந்தன.
எருமையோடு மரணதேவன்
எல்லைக் கோட்டின் அப்பால் நின்றான்.
கல் இடுக்குகளில்
மண்ணைப் புரட்டி
புல் இதழ் விரிக்கும் அறுகினைப் போல்
தொடுவான் இடற
சுதந்திரச் சிறகுகள் விரித்ததென்
ஆத்மா.

என்னுடன் படகில் இருந்த
மனிதரின் கண்கள்
நீண்ட நாட்களின் பின்னர் சுடர்ந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம்மரும் கடலை
எம் தாய் மண்ணின் எழில் மிகு கரைகளை
பூச் செண்டுகளாய்
ஊர் மனை தொடுத்த நம் வீதிகளை
இழந்து போனோம்.

எங்கும்! கண்களைக் கட்டி
காக்கிகள் போர்த்து
துப்பாக்கிகளில் அறையப்பட்ட
சிங்களம் பேசும் நடைப்பிணங்கள்.

வாழ்விடம் என்கிற சிறப்பினை இழந்து
பதுங்கும் குழிகளாய் எங்கள் வீடுகள்.

துயர்களின் நடுவிலும்
ஒடுங்குதலறியா அறுகினைப் போல்
சுதந்திரச் சிறகுகள் தொடுவான் இடற
எழுந்த என் ஆத்மா
''தப்பி ஓட முனைந்திடேல்'' என்று
உறுதியாக என்னைப் பணித்தது.

''பின் வாங்குதலே இது
மரணத்தை வெல்வோம்.''

வ.ஐ.ச.ஜெயபாலன்

1985.

நன்றி– சூரியனோடு பேசுதல்

www.tamilarangam.net

உங்களுடன் சில வார்த்தைகள்...........

**சிந்தனை** இதழ்களை ஒழுங்காக வெளிக் கொண்டு வருவதற்கு இடையூறாக இருப்பது சாதாரணமாக இத்தகைய பத்திரிகைகளுக்கு ஏற்படும் நிதிநெருக்கடியே -யாகும். தாங்கள் பெறும் இதழுக்குரிய பணத்தைச் செலுத்துவதன் மூலமும், ஆறு இதழ்களுக்கான வருட சந்தா 20 டி.எம். எமக்கு அனுப்புவதன் மூலமும் நீங்கள் இந்த நிதி நெருக்கடியைப் போக்கி **சிந்தனை** யை ஒழுங்காக வெளிவர உதவி செய்யலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள தோழர்களுக்கு எமது பத்திரிகைகளை இலவசமாகவே அனுப்புகின்றோம். எமது பத்திரிகையைப் பெற விரும்பும் மற்றைய தோழர்களின் முகவரிகளை எமக்கு அறிவிப்பதன் மூலமும், தங்களிடமுள்ள பத்திரிகைகளையும், பத்திரிகை நறுக்குகளையும் எமக்கு அனுப்புவதன்மூலமும் நீங்கள் எமக்கு உதவலாம்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள தோழர்கள் நிதி மற்றும் வருடசந்தா( 20 டி.எம்) அனுப்ப வேண்டிய

முகவரி-- P.Kumarasamy,
c/o. SINTHANAI,
Olga str 49,
7- Stuttgart 1.

குறிப்பு: தனிப் பிரதிக்கான அன்பளிப்பு 4 டி.எம் தபால் முத்திரைகள் மூலமாகவும் அனுப்பலாம்.

ஆசிரியர் குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆசிரியர் குறிப்பு.

ஆசிரியர் குறிப்பு வழக்கமாக எழுதப்படும் இடத்தில் கவிஞர் வைரமுத்துவிற்கு இடம் கொடுக்க வேண்டி ஏற்பட்டு விட்டதால் கடைசிப்பக்கத்தில் உங்களைச் சந்திக்கின்றேன்.

பெண்கள் இதழுக்குப் பாராட்டுகள் தெரிவித்தவர்களுக்கு எமது நன்றிகள்.

சிந்தனைப் பத்திரிகையைத் தொடர்ச்சியாகக் கொண்டுவருவதில் உள்ள நெருக்கடிகள் பற்றி எதிர்ப்பக்கத்தில் எழுதியிருக்கின்றோம்.

பல அன்பர்களுக்கு தொடர்ச்சியாக 'அறிமுகம்' செய்யுமுகமாக இலவசமாகவே பத்திரிகையை அனுப்பி வருகின்றோம். அவர்கள் தனிப் பிரதிகளுக்கான அன்பளிப்பு 4 டி.எம் ஐ 0.50 டி.எம் (பெண்கள்) பெறுமதியுள்ள முத்திரைகளாகவும் எமக்கு அனுப்பலாம்.

ஆறு இதழ்களுக்கான வருட சந்தா 20,- டி.எம் மட்டுமேயாகும். இதைச் செலுத்துவதன் மூலம் பழைய சிந்தனை இதழ்களை அல்லது எமது வெளியீடுகளை இலவசமாகப் பெறலாம்.

## கருத்ரங்கு.

சிந்தனைக் கருத்தரங்கு இல.1 29.3.1987 இல் நடைபெற்றது. 'அரசியலும் மக்களும்', 'ஈழப் போராட்டத்தின் இன்றைய நிலவரம்' ஆகிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

கருத்தரங்கு இல.2 ஆடி மாதத்தில் நடைபெற இருக்கின்றது. பங்குகொள் கொள்ள விரும்புவோர் கீழ் காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். மீண்டும் சந்திப்போம். நன்றி.

ஆசிரியர். 10.6.1987

**Editor**
SINTHANAI
Olgastr. 49
7000 Stuttgart 1
West Germany

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SINTHANAI

Estd: 1985. 3/87

All communications shall be addressed to :

Editor
SINTHANAI
Olgastr. 49
7000 Stuttgart 1
West Germany

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்